புதுடெல்லியில் நேற்று, ஒன்றிய கனரகத் தொழிற்சாலைகள் துறை அமைச்சர் குமாரசாமியை, நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா சந்தித்து உரையாடினார். அப்போது திருச்சி சிவா விடுத்த கோரிக்கையை ஒன்றிய அமைச்சர் ஏற்று, "சேலம் உருக்காலை புனரமைக்கப்படும்" என உறுதியளித்தார்.

துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி

சோழவரம் வடக்குப் பகுதியில் விளையாட்டு உபகரணங்கள்!

வழுதிகை நா.செல்வசேகரன் தலைமையில் வழங்கல்!

திருவள்ளூர், நவ. 30-

துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளையொட்டி சோழவரம் வடக்குப் பகுதியில் விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜ் ஆலோசனின்படி சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன் தலைமையில் விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் கிட் உள்பட விளையாட்டு உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

இதில் சோழவரம் வடக்கு பகுதியை சார்ந்த கழகத் தோழர்களும், கழக முன்னோடிகளும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கழக இளைஞரணி செயலாளரும், தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன் ஆகியோர் முன்னிலையில் 1000 பேருக்கு அறுசுவை உணவினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். இந்நிகழ்வில் தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம்சுருதி எம்.சி. மற்றும் கழக தோழர்கள் பங்கேற்றனர்.

ரயில் விபத்துகளைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, நவ.30-

கடந்த ஓராண்டில்நடைபெற்ற ரயில் விபத்துக்கள், அதற்கான காரணம், பலியானவர்கள் எத்தனை பேர்? இனி விபத்துக்கள் நடக்காமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிகைகள் என்னஎன்பது பற்றி மாநிலங்களவையில் தி.மு.அக். எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில் :

ரயில் பயனபாதுகாப்புக்காக ஒன்றிய அரசு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகள் காரணமாக கடந்த பத்தாண்டுகளில் ரயில் விபத்துக்கள் வெகுவாகக்குறைந்துள்ளன. 2014-15 ம்ஆண்டில் 135 விபத்துக்களாக இருந்தது, 2023-24 ம் ஆண்டு 40 விபத்துகளாகக் குறைந்துள்ளது.

2004-14 காலகட்டத்தில் 1711 ரயில் விபத்துக்கள் மூலம் 904 பேர் பலியாகினர். 3155 பேர் காயமடைந்தனர். கடந்த பத்தாண்டுகளில் அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக 2014-24 காலகட்டத்தில் 678 விபத்துக்களாக அது குறைந்தது. இதில்; 748 பேர் பலியாகினர். 2087 பேர் காயமடைந்தனர்.கடந்த ஓராண்டில் ஏற்பட்ட 29 விபத்துகள் மூலம் 17 பேர் பலியாகினர்; 71 பேர் காயமடைந்தனர்.

மனித உயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுடன் ரயில் வேக்கும் விபத்துக்களால் இழப்பு ஏற்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் விபத்துக்களால் ரயில்வேக்கு ஏற்பட்ட இழப்பு 313 கோடி ரூபாய்.

விபத்துக்களால் உயிரிழப்பு மற்றும் காயமடைந்தவர்களுக்கான இழப்பீட்டை ரயில்வே நடுவர் மன்றம் முடிவு செய்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும் இழப்பீடாக 26.22 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ரயில் விபத்துகளுக்கு மனிதத் தவறுகளே காரணம்!

ஒவ்வொருவிபத்தின்போதும், அதற்கான காரணங்களைக் கண்டறிய நிபுணர் குழு அமைக்கப்படுகிறது. அந்த அறிக்கையின்படி மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலான ரயில் விபத்துகளுக்கு ரயில் பெட்டிகள், பாதைகள், கருவிகள் பழுதாவது மற்றும் மனிதத் தவறுகளே முக்கிய காரணம்.

இவற்றை சரிசெய்யவும், பாதுகாப்பான ரயில் பயணத்தை உறுதி செய்யவும் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரயில் பாதை புனரமைப்பு, புதிய கருவிகள் வாங்குவது, தேவையான இடங்களில் பாலங்கள் கட்டுவது போன்ற பணிகள் இந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

ரயில் பாதைகளை அமைக்கும் பணியில் தானியங்கி இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அந்தப் பணியில் மனிதத் தவறுகளுக்கு வாய்ப்பில்லாத நிலையை அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கும் வகையில் நாடு முழுவதும் 6608 ரயில் நிலையங்களில் எலெக்ட்ரானிக் இன்டர்லாக்கிங் சிஸ்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. சுமார் பதினோராயிரம் லெவல் கிராசிங்குகளிலும் இந்த சிஸ்டம் அமல்படுத்தப்பட்டதன் மூலம் பெருமளவு விபத்தைக் குறைக்க முடிகிறது.

பனிக்காலத்தில் ரயில் டிரைவர்களுக்கு உதவும் வகையில் ஜி.பி.எஸ். கருவி உதவியிலான பாதுகாப்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆளில்லாத லெவல் கிரஸிங்கே இல்லை என்ற நிலையை ஐந்தாண்டுகளுக்கு முன்பே எட்டிவிட்டோம். அடிமட்ட பாலங்கள், மேம்பாலங்கள் போன்றவற்றை அமைத்து பணியாளர் உள்ள சுமார் ஏழாயிரம் லெவல் கிராஸிங்குகள் நீக்கப்பட்டுள்ளன.

விபத்தைத் தவிர்ப்பதில் முக்கிய பங்காற்றும் கவாச் தொழில்நுட்பம் தென், மத்திய மற்றும் வடக்கு ரயில் வேயில் சுமார் 1548 கிலோ மீட்டர் தொலைவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளது. டெல்லி - மும்பை, டெல்லி - ஹவுராமார்க்கத்தில் சுமார் 3000 கிலோ மீட்டர் ரயில் பாதையில் கவாச் தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் பணிகள் நடந்துவருகின்றன.

இதுதவிர ரயில் பாதைகளில் தொடர்ச்சியான ரோந்துப் பணிகளும் தொய்வின்றி நடக்கின்றன. இதில் ரயில் பாதைகளில் ஏற்படும் விரிசல்கள் கண்டறியப்பட்டு சரி செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

கிராமப்புறங்கள் - பின்தங்கிய பகுதிகளில்

முன்னுரிமை அடிப்படையில் மாதிரிப் பள்ளிகளை அமைத்திடுவீர்!

மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!

திருவண்ணாமலை, நவ.30:

கிராமப்புறங்கள் மற்றும் பின் தங்கிய பகுதிகளில் மாதிரி பள்ளிகளை முன்னுரிமை அடிப்படையில் அமைக்க வேண்டும் என மக்களவையில் திமுக எம்பி அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது, திருவண்ணாமலை தொகுதி திமுக எம்பி சி.என்.அண்ணாதுரை தெரிவித்திருப்பதாவது:

நாடு முழுவதும் எவ்வளவு மாதிரிப் பள்ளிகள் ஒன்றிய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றை

அமைப்பதற்கு அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகள் என்ன என்பதை விளக்க வேண்டும். குறிப்பாக, முன்னுரிமை அடிப்படையில் கிராமப் புறங்கள் மற்றும் பின் தங்கிய பகுதிகளில் மாதிரி பள்ளிகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், ஆசிரியர்களுடைய காலிப் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளதா என்பதை தெரிவிக்க வேண்டும். தமிழ்நாட்டில் பள்ளிகள் திறக்கப்பட்ட இடங்கள் மற்றும் பள்ளிகளை அமைப்பதற்காக கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகள், ஒதுக்கப்பட்ட நிதி ஆகியவை குறித்து குறித்து தெரிவிக்க வேண்டும். மாதிரி பள்ளிகளில் பெண்கள் மற்றும் பட்டியலின மாணவர்கள் கல்வி பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் தெரிவிக்க வேண்டும். அதேபோல், பிஎம் கேவிஓய் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி கள், தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் அளிக்கப் பட்ட விவரங்களையும் தெரிவிக்க வேண்டும். திறன் பயிற்சியில் எஸ்சி மற்றும் எஸ்டி பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சி.என்.அண்ணாத்துரை வலியுறுத்தினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை எஸ்.தனசேகர்- தலைமை

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாள் - மாபெரும் இரத்ததான முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை. நவ.30

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் 6, இரத்தத்தில் கலந்தது திராவிடம்! இதயம் உதயத்தின் வாழ்விடம்! எனும் தலைப்பில் மாபெரும் இரத்ததானமுகாம் 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் அருகில், அம்ரீஸ் மஹாலில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். தனசேகர் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, முன்னிலை வகிக்கின்றனர். ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், சரிதாமகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ். பன்னீர்செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, பி. பழனி, இளா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம். தாவூத்பீ MC, எல்.டி.தாமஸ், கே.ஜார்ஜ்குமார், பி.பொன்முடி, பி.டி.சி.ரவி, ப.அன்பரசு, டி.சந்திரசேகர், கே.பி. ஆதவன்மணி, யோகபிரியா தனசேகர் MC, பி.அமுதா பொன்னி வளவன் MC, சி.ஸ்ரீதணிMC கே.சாரதா MC, கே.பிரசாந்த், எ. வினோத், டி.பாலுபிரசாத், ச.ராஜேஷ், எல்.எஸ்.உதயகுமார், என்.திலிப்குமார், ஆ.தியாகராஜன், எஸ்.பிரபு சூரி, ஆர்.இளங்கோ, என். இளங்கோ, ஆர்.சசிகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இரத்ததான முகாமை, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைக்கிறார்.

மேலும் இவ்விழாவில், மேயர் பிரியாராஜன், டாக்டர் கலாநிதிவீராசாமி எம்பி, இரா.கிரிராஜன், எம்.பி, ப.ரங்கநாதன்ExMLA, இரா.விடுதலை, இரா.தயாளன் எம்.சாக்ரடீஸ், வி. வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி, என்.ராமச்சந்திரன், M.D.தமிழ்செல்வன், செ.முருகன் என். சௌந்தர்ராஜன், என். பவுல்ராஜ், எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், எம்.துளசி, எஸ்.பி.சதீஷ்பாபு, பி.வெங்கடேசன் ஜி.செல்வம், ஜி. பொன்னிவளவன், சி.சந்திரசேகர், புரசை.ஜி. ராமகிருஷ்ணன், பொன்புகழேந்தி, ஆர்.ஆரோக்கியதாஸ், எம்.நாகராஜ், அ.கன்னியப்பன், டி.ஏ.ராஜன், ஆர்.மோகனசுந்தரம், எஸ். சம்பத்குமார், ஜெ.சரவணன், என்.ரவிசந்திரன், ஆர்.சொக்கலிங்கம், எஸ். நாகராஜன், ஏ.எம்.ராஜசேகர் ஆர்.ஜெ.வெங்கடரமணமூர்த்தி, எம்.சத்யா, துரை வெங்கடேசன், ஆ.சு. அசோக்குமார், கே.எஸ்.சபரிநாத், வி.அருண்ராஜன், சொ.பழனி, எஸ்.சின்னராஜா, க.ஜெயயால், பி. பாஸ்கர், எஸ்.துளசிகுருபரன், எஸ்.மணிவண்ணன், எஸ்.சுகுமார், எஸ்.தினேஷ், வி.ஜெ.கஜேந்திரன், எஸ். ஸ்ரீநாத், இ.சிவா எஸ்.மதன் எ.முகம்மது இஸ்மாயில் ஜி.லட்சுமணன் டி.சரவணன் ஜி.எஸ்.பிரகாஷ் டி. ரமேஷ் எ.சதீஷ்குமார் எஸ். டி.சீனிவாசன் பெ.குருநாதன் பிரவீன்சேட் மகாராஜன் என்னேவலன் சு.கி. ராஜ் கே.சதீஷ்பாலு எம். துரை அருண்மனோகர் பி.சுரேஷ் கே.கங்காதரன் கௌரிகுருபரன் வி.பிரபாவதி எஸ்.விஜயலட்சுமி வி.யோகேஸ்வரன் பெரியார் பிரியா டி.தமிழ்ச்செல்வி யமுனாதேவி த.ஹேமலதா பி.முனுசாமி உதயகுமார் ஜெகதீஷ் பிளம்பர் ஆறுமுகம் மல்லிபூ நகர் சிவா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் பி.ஊமைதுரை நன்றி கூறுகிறார்.

அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் - திருப்பெரும்புதூர்

முன்னாள் எம்.எல்.ஏ. ஏ.கோதண்டம் திருவுருவப் படம்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைக்கிறார்!

காஞ்சிபுரம், நவ.30-

கழக மூத்த முன்னோடி, திருப்பெரும்புதூர் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. நினைவில் வாழும் ஏ. கோதண்டம் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (1.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

படப்பை ஆ.மனோகரன், எஸ்.டி.கருணாநிதி, ந. கோபால், ஏ.வந்தேமாதரம், எஸ்.ஜபருல்லா, ஆர். சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அன்னாரது திருவுருவப் படத்தை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. , மீ.அ. வைதியலிங்கம், எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. , இ.கருணாநிதி எம்.எல்.ஏ. , வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., த.துரைசாமி, து.மூர்த்தி, வெ.விசுவநாதன், வீ. தமிழ்மணி, க.வசந்தகுமாரி, கோ.காமராஜ், டி.கே.குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், கே.கே.இராசமாணிக்கம் மற்றும் எம்.சங்கர், ந. கருணாநிதி, க.கந்தசாமி, ஆ. கே.அபிபுன்னிசா, நா.அருள்மொழி, தே. திருநாவுக்கரசு, என்.குணசேகர், ஜெ.மணிமாறன், க.வே. சிதம்பரம், டி.பி.செந்தில்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

குன்றத்தூர் நகரக் கழக செயலாளர் கோ. சத்தியமூர்த்தி நிகழ்ச்சிக்கு வருகை தரும் அனைவரையும் வரவேற்று இறுதியில் நன்றி கூறுகிறார்.

தி.மு.க. மாணவர் அணி

பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு!

தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, தி.மு.க. மாணவர் அணி சார்பில் "மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா" இன்று 30.11.2024 (சனிக்கிழமை) மாலை 05.00 மணிக்கு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்கும் பொதுக்கூட்டம் காஞ்சிபுரம் காமராஜர் சாலை, பேருந்து நிலையம் எதிரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் காரணமாக அந்த பொதுக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டு, வரும் 06.12.2024 அன்று மாலை 05.00 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்,"
சென்னை-18.
நாள்: 29.11.2024

சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் கோளூர் கிராமத்தில் பொதுமக்களுக்கு உணவு, விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் பா.சுகுமாறன், மு.கதிரவன், கா.சு.ஜெகதீசன், ஜெயசித்ராசிவராஜ், கோளூர்.கோபால், வழக்கறிஞர் மூர்த்தி, ராஜேந்திரன், ரவிசந்திரன், கோளூர் சீனிவாசன், ஆலாடு அமுதா ரகுபதி, அவுரிவாக்கம் அன்பு, யேசுராஜன், ரவி, கருணாகரன், சண்முகம், நரேஷ், செங்கல்வாராயன், பி.எல்.சி.ரவி, பாஷா, கஜேந்திரன், திருநாவுக்கரசு, மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

சிவகங்கை, விருதுநகர் - இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு

வைகை அணையிலிருந்து தண்ணீர் திறப்பு!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.30-

தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

வைகை அணையிலிருந்து சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு கிருதுமால் உபவடிநிலத்திற்கு (கிருதுமால் நதி) குடிநீர் தேவைக்காக சிறப்பு நிகழ்வாக வைகை அணையில் கூடுதல் இருப்பாக உள்ள

1684 மில்லியன் கனஅடி நீரில், வருகின்ற 01.12.2024 முதல் 8 நாட்களுக்கு வினாடிக்கு 650 கனஅடி வீதம் மொத்தம் 450 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் நீரின் இருப்பு மற்றும் நீர்வரத்தினைப் பொறுத்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் நவம்பர் 27ஆம் தேதி பிறந்த குழந்தைகளுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஏற்பாட்டில் காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தங்க மோதிரம் அணிவித்தார் மேலும் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அனைத்து குழந்தைகளுக்கும் தாய் சேய் பரிசு பெட்டகம் பழ கூடை ரொட்டி ஆகியவற்றை வழங்கினார்கள். அப்பொழுது துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் இ.எஸ் பெர்னாட், ஏ.கே கருணாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.